DINAMALAR

21 OCT 2022

PAGE 2

# சிறந்த சொசைட்டி தலைவராக பல்கலை பேராசிரியர் தேர்வு

**புதுச்சேரி, அக். 21–**

சிறந்த சொசைட்டி தலைவர் விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழகம் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் துறை, தலைவர் சண்முகானந்தத்தை துணை வேந்தர் குர்மீத்சிங் பாராட்டினார்.

புதுச்சேரி பல்கலை பேராசிரியர் சண்முகானந்தம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பிரிவு, ஐ.இ.இ.இ., ஆண்டெனாக்கள் மற்றும் பிரசார சங்கம் (மெட்ராஸ் பிரிவு) சிறந்த சொசைட்டி தலைவர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். 27 சங்கங்களில், இந்தாண்டு ஆண்டெனாக்கள் மற்றும் பரப்புதல் செயல்பாடு பங்களிப்பையொட்டி, இவ்விருதுக்கு தேர்வாகியுள்ளார்.

ஆண்டெனாஸ் மற்றும் ப்ராபகேஷன் சொசைட்டி மூலம் பட்டறைகள், ஆசிரிய மேம்பாட்டு திட்டம், விரிவுரை தொடர், சர்வ தேச மாநாடுகளை பேராசிரியர் ஏற்பாடு செய்தார்.



சிறந்த சொசைட்டி தலைவர் விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் துறை, தலைவர் சண்முகானந்தத்தை, துணை வேந்தர் குர்மீத்சிங் பாராட்டினார்.

உலக இன்ஸ்டிட்யூட் ஆப் எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியர்ஸ் தினத்தில், அப்துல்கலாம் பிறந்தநாளையொட்டி, அண்ணா பல்கலையில் இந்த விருது வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

அன்னை தெரேசா பல்கலைக்கழக துணை வேந்தர் வைதேகி, இந்த விருதை பேராசிரியர் சண்முகானந்தத்திற்கு வழங்கினரர்.

DINAMANI

21 OCT 2022

PAGE 8

# புதுவை பல்கலை. நூலகருக்கு தேசிய விருது

புதுச்சேரி, அக்.20: புதுவை மத்திய பல்கலைக்கழக நூலகர் எம்.விஜயகுமாருக்கு 2022-ஆம் ஆண்டுக்கான தேசிய அளவிலான சிறந்த நூலகர் விருது வழங்கப்பட்டுள்ளது.



புதுவை மத்திய பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங்கிடம் வாழ்த்து பெற்ற தேசிய விருது பெற்ற நூலகர் எம்.விஜயகுமார்.

இதுகுறித்து பல்கலைக்கழகம் சார்பில் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுவை மத்திய பல்கலைக்கழக நூலகர் எம்.விஜயகுமாருக்கு எஸ்.ஏ.எல்.ஐ.எஸ். அமைப்பின் சார்பில் 2022-ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலகருக்கான தேசிய விருது வழங்கப்பட்டது.

நூலகத் துறையில் சிறப்பான பணி, நூலகத் தகவல்களில் இலக்கை அடைந்தது போன்றவற்றுக்காக இந்த விருது வழங்கப்பட்டது. கடந்த 2020-ஆம் ஆண்டில் அவர் கர்நாடகத்திலுள்ள இந்திய நூலகர்கள் சங்கத்தின் சிறந்த நூலகருக்கான விருதைப் பெற்றார்.

அவர் 75-க்கும் மேற்பட்ட நூலகக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். மேலும், 90-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். மேலும், நூலகச் சொற்பொழிவுகளுக்காக பிரிட்டன், ஈரான், சீனா, நேபாளம், இலங்கை, மலேசியா, தாய்லாந்து போன்ற வெளிநாடுகளுக்கும் விஜயகுமார் சென்று வந்துள்ளார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

DINAMANI

21 OCT 2022

PAGE 8

காரைக்கால் புதுவை பல்கலை.யில்

# தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான கூட்டமைப்பு உருவாக்கம்

**புதுச்சேரி, அக். 20:** புதுவை பல்கலைக்கழகத்தின் காரைக்கால் வளாகம் அறிவியல் தொழில்நுட்பத் துறையில் அதிநவீன பகுப்பாய்வு, தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான ஒருங்கிணைந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) கி.மகேஷ் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுவை பல்கலைக்கழக காரைக்கால் வளாகத்தின் கணினி அறிவியல் துறை, அறிவியல் தொழில்நுட்பத் துறை ஆகியவை இணைந்து அதிநவீன பகுப்பாய்வு, தொழில்நுட்ப உதவி நிறுவனங்கள் (2022) திட்டத்தைத் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொண்டன.

அதனடிப்படையில், ஜிப்மர்-காரைக்காலில் உள்ள பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண்மை, ஆராய்ச்சி நிறுவனம், மு.கருணாநிதி அரசு முதுநிலை ஆய்வுகள், ஆராய்ச்சி நிறுவனம், பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மையம் ஆகியவற்றுடன் இணைந்து கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி, மேம்பாட்டில் நவீன நுட்பங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், அறிவியல், தொழில்நுட்பத் துறையிலுள்ள அறிவியல் சமூகத் தேவையை சமாளிக்கவும், இந்திய அரசு நிறுவனங்களை அமைக்கத் தொடங்கியுள்ளது. இந்த அமைப்பு அதிநவீன பகுப்பாய்வு, திறன்மிகு உற்பத்தி வசதிகளுடன் இணைக்கப்படவுள்ளது.

பெரிய அளவிலான உபகரணங்களை செயல்படுத்த இந்த மையம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி, தொடக்க நிலை தொழில் நிறுவனங்கள், சிறு,குறு நிறுவனங்கள், குறைந்த நிதியுதவி பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு அதிநவீன அறிவியல், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வசதி செய்து தரப்படவுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.